Register No. [ ]

**TA5A**

**6872–25**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

CIVIL PROCEDURE CODE

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Enumerate the provisions relating to legal disability under the Limitation Act.

   காலவரையறைச் சட்டத்தின் கீழ் சட்டத் தகுதியின்மை குறித்த வகையங்களைத் தொகுத்து வரிசைப்படுத்துக.

2. Explain the process of service of summons to defendants and witnesses.

   சாட்சிகளுக்கும் மற்றும் பிரதிவாதிகளுக்கும் அழைப்பாணையை சார்வு செய்யும் முறையினை விளக்குக.

3. Discuss the rules relating to joinder of parties and joinder of cause of action.

   தரப்பினர்கள் மற்றும் வழக்கு மூலங்களின் சேர்க்கைகள் குறித்த விதிகளை விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. State the circumstances that permit filing of a civil appeal before the Supreme Court of India.

   எத்தகைய சூழ்நிலைகளில் இந்திய உச்ச நீதிமன்றத்தில் ஒரு உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்ய அனுமதிக்கப்படுகிறது என்பதை குறிப்பிடுக.

5. What is an affidavit? For what purposes can it be used under the Civil Procedure Code?

ஆணையுறுதிப் பத்திரம் என்றால் என்ன? எந்த நோக்கங்களுக்காக உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் அதனைப் பயன்படுத்த இயலும்?

6. Explain the fundamental rules of pleadings in India.

இந்தியாவில் வாதுரைகள் குறித்த அடிப்படை விதிகளை விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Proclamation of sale

விற்பனைப் பிரகடனம்

(b) Inherent jurisdiction

உள்ளார்ந்த அதிகாரம்

(c) Abatement of suits

வழக்குகள் அற்றுப்போதல்

(d) Mesne profits

மேலாதாயம்

(e) Set-off

சரியீடு

(f) Decree Holder

தீர்ப்பாணை பெற்றவர்

(g) Issues

வழக்கெழு வினாக்கள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Ram sued Somu in a foreign court. The suit was dismissed. Whether the judgement will operate as a bar to a fresh suit to be filed in India. Decide.

வெளிநாட்டு நீதிமன்றத்தில் சோமுவுக்கு எதிராக இராம் என்பவர் வழக்கு ஒன்று தாக்கல் செய்கிறார். அவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. புதியதொரு வழக்கை இந்தியாவில் தொடர அத்தீர்ப்பு தடையாகுமா? முடிவு செய்க.

9. Suresh residing in Chennai beats Ramesh in Vellore. Ramesh sues Suresh in Chennai for compensation. Examine the jurisdiction of the court in Chennai.

சென்னையில் வசிக்கும் சுரேஷ் என்பவர் இரமேஷ் என்பவரை வேலூரில் வைத்து அடித்தார். இழப்பீடு கோரி இரமேஷ் என்பவர் சுரேஷ் மீது சென்னையில் வழக்குத் தொடர்ந்தார். சென்னை நீதிமன்றத்தின் ஆள்வரை எல்லையினை ஆய்க.

10. A suit was filed by Nirmal against Kumar for Rs. 30,000/- and interest in Tiruvallur Court. The court passed a decree for Rs. 25,000/- and nothing more. Nirmal filed an application to amend the decree by adding a prayer for payment of interest. Can the court amend the decree?

நிர்மல் என்பவர் குமார் என்பவருக்கு எதிராக ரூபாய் 30,000/- மற்றும் வட்டி கேட்டு திருவள்ளூர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்கிறார். நீதிமன்றமானது ரூ. 25,000/-க்கு மட்டும் தீர்ப்பாணை பிறப்பித்தது, வேறு தீர்வழி ஏதும் தரப்படவில்லை. ஆகவே வட்டித்தொகையை சேர்த்து வழங்க வேண்டி தீர்ப்பாணையினை திருத்தம் செய்வதற்கு நிர்மல் மனு தாக்கல் செய்கிறார். இதில் நீதிமன்றம் தீர்ப்பாணையைத் திருத்தம் செய்ய முடியுமா?

---

Register No. | | | | | | | | |

**TA5B** **6873–25**

(For the candidates admitted from 2017–2018 to 2021-2022)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

CRIMINAL PROCEDURE CODE

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Elucidate the jurisdiction of the criminal courts in trial proceedings.

   வழக்கு விசாரணையில் குற்றவியல் நீதிமன்றங்களுக்குள்ள அதிகார வரம்பு குறித்து தெளிவுபடுத்துக.

2. Define the Arrest warrant. Under what circumstances police officer can arrest without warrant under the Cr.PC.

   பிடியாணை என்பதனை விவரி. காவல் அலுவலர் பிடியாணையின்றி கைது செய்வதற்கு குற்றவியல் நடைமுறை சட்டத்தில் கூறப்படும் சூழ்நிலைகளைக் குறிப்பிடுக.

3. Explain the provisions regarding complaint to magistrate.

   குற்றவியல் துறை நடுவர்களிடம் முறையீடுகள் செய்யும் தொடர்புடைய பிரிவுகள் பற்றி விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain about reference procedures to High Court.

   உயர்நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு அனுப்பி வைத்தல் பற்றி விவரி.

5. Explain the objects of probation. What are the conditions to order a release after admonition?

   நன்னடத்தை விடுவிப்பின் நோக்கங்களை விளக்குக. எந்த நிபந்தனைகளின்படி கண்டிப்பிற்கு பின்னர் விடுவிப்பிற்கான உத்தரவிடப்படுகிறது?

6. 'No appeal lies from any judgment or order of criminal court except as provided by code or by any other law' - Explain.

'சட்டத்தால் கூறப்பட்டிருந்தாலொழிய குற்றவியல் நீதிமன்றங்களின் தீர்ப்புரை (அ) ஆணைக்கெதிராக மேல்முறையீடு செய்ய இயலாது' - விவாதிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக:

(a) Bond for good behaviour.

நன்னடத்தைக்கான உறுதிமொழி பத்திரம்.

(b) Public Prosecutor.

அரசு குற்றத்துறை வழக்குரைஞர்கள்.

(c) Inquiry.

விசாரணை.

(d) Irregularities which affect proceedings.

நடவடிக்கைகளை பாதிக்கும் முறை கேடுகள்.

(e) Autre fois acquit, Autre fois convict.

முன் விடுதலைத் தீர்ப்பு, முன் தண்டனைத் தீர்ப்பு.

(f) Plea of guilty.

குற்றச்சாட்டு ஏற்புரை.

(g) Habitual offender.

வழக்கமான குற்றவாளி.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. An Assistant Sessions Judge has convicted a person for an offence and sentenced him to 3 year rigorous imprisonment. The convicted person wants to file an appeal. Decide.

ஒரு உதவி அமர்வு நடுவர் ஒரு குற்றத்திற்கு தண்டித்து அவருக்கு மூன்று வருடங்கள் கடுங்காவல் தண்டணையும் அளித்தார். தண்டிக்கப்பட்ட நபர் மேல் முறையீடு செய்ய விரும்புகிறார். தீர்மானிக்க.

9. A woman had been abducted at Nagercoil and murdered at Chennai. Decide the place of trial.

ஒரு பெண் நாகர்கோவிலிலிருந்து கடத்தப்பட்டு சென்னையில் கொலை செய்யப்படுகிறார். வழக்கு விசாரணை செய்யும் இடத்தை தீர்மானிக்கவும்.

10. An offence is provided with maximum of five years imprisonment. The criminal court takes cognizance of the offence after expiry of seven years. Can the criminal court do so?

ஒரு குற்றத்திற்கு அதிகப்பட்ச அளவாக ஐந்தாண்டுகள் சிறை தண்டணை அளிக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. அக்குற்றம் புரிந்த நாளிலிருந்து ஏழு ஆண்டுகள் முடிந்த பிறகு குற்றவியல் நீதிமன்றம் கவனத்திற்கு எடுத்துக் கொள்கிறது. அவ்வாறு நீதிமன்றம் செய்யலாமா?

Register No. [ | | | | | | | ]

**TA5C**

**6874–25**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

ENVIRONMENTAL LAW

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Examine the role of various social movements in protecting the environment.

   சுற்றுச் சூழலைப் பாதுகாக்க பல்வேறு சமூக இயக்கங்களின் பங்கினை ஆய்வு செய்க.

2. Discuss the evolution of the fundamental right to live in a healthy environment in India.

   இந்தியாவில் சுகாதாரமான சுற்றுச்சூழலில் வாழ்வது என்பது ஒரு அடிப்படை உரிமை என்பதனின் பரிணாம வளர்ச்சியை விவாதிக்கவும்.

3. Critically analyse the laws relating to prevention of cruelty to animals.

   விலங்குகள் வதைத் தடுப்புச் சம்பந்தமாக உள்ள சட்டங்களைக் கூர்ந்தாய்வு செய்யவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the sources and effects of noise pollution? Explain the rules to combat noise pollution.

   ஒலி மாசின் ஆதாரங்கள் மற்றும் விளைவுகள் யாவை? ஒலி மாசை நீக்குவதற்கான விதிகளை விளக்குக.

5. Enumerate the steps taken by the government to conserve forest resources.

   வன வளங்களைப் பேணுவதற்கு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எடுத்தியம்புக.

6. Discuss the role and jurisdiction of National Green Tribunal in protecting the environment.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் பங்கு மற்றும் ஆள்வரையினை விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Eco-mark

சுற்றுச்சூழல் குறியீடு

(b) National Water Policy

தேசிய நீர் கொள்கை

(c) Reserve Forests

ஒதுக்கப்பட்ட காடுகள்

(d) Animal Welfare Board of India

இந்திய விலங்கின நல வாரியம்

(e) Environmental Audit

சுற்றுச்சூழல் தணிக்கை

(f) Green Peace

பசுமை அமைதி

(g) Renewable energy

புதுப்பிக்கத்தக்க ஆற்றல்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The Government of India established a thermal power plant at Odisha. Fly ash which emanated out of the plant posed a threat to human health. 'Vigilant', a non-governmental organisation opposed the project and filed a case on the ground that it violates the fundamental rights - Decide.

ஒடிஷா மாநிலத்தில் அனல் மின் நிலையத்தை இந்திய அரசு நிறுவியது. இதன் விளைவால் அனல் மின் நிலையத்தில் ஆங்காங்கே பரவும் சாம்பல் வெளிவந்தது. இது மனித உடல் நலனுக்கு அச்சுறுத்தல் உண்டாக்கியதால் "விஜிலெண்ட்" என்ற அரசு சாரா அமைப்பு இத்திட்டத்தை எதிர்த்தும் மேலும் இது அடிப்படை உரிமைகளை மீறுவதாகக் கூறியும் வழக்கிட்டது - தீர்மானிக்கவும்.

9. A sugar factory let out trade effluents into river. As a result, the river water became polluted and gravely affected its quality. The nearby residents filed a case to close the sugar factory. Decide.

சர்க்கரை ஆக்கத் தொழிலகம் திடக் கழிவுகளை ஆற்றில் விட்டதால் ஆற்று நீர் மாசடைந்ததுடன் அதன் தூய தன்மையும் பாதிக்கப்பட்டது. அருகாமையில் வசிக்கும் மக்கள் சர்க்கரை ஆலையை மூட வேண்டும் என்று வழக்கிட்டனர் - தீர்மானிக்கவும்.

10. A district forest officer illegally cut down thousands of trees in a special eco-sensitive zone and sold them off without any permission. The Government represented before National Green Tribunal that only few trees were cut to protect the area from pollution and to set up new plantation of trees - Decide.

மாவட்ட வன அலுவலர் சிறப்பு சுற்றுச்சூழல் மிகுந்த பகுதியில் ஆயிரக்கணக்கான மரங்களை சட்டத்திற்கு புறம்பாக வெட்டி அதை உரிய அனுமதியின்றி விற்று விட்டார். ஆனால் அரசு தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் முன்பு மேற்கொண்ட நடவடிக்கையில் அந்த இடத்தில் மாசு ஏற்படாமல் பாதுகாக்கவும், புதிதாக மரங்கள் நட வேண்டியுள்ளதால் சில மரங்கள் தான் வெட்டப்பட்டது என்ற வாதத்தை முன் வைத்தது - தீர்மானிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

**TA5D** **6875–25**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

LABOUR LAW — II

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ★ ILLUPPUR - 622102. ★

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the term "Accident arising out of and in the course of employment" and notional extension in time and employment of employers premises theory.

   "பணிபுரியும் பொழுது மற்றும் பணியின் விளைவாக ஏற்படும் விபத்து" என்ற பதத்தினையும், பணியாண்மையரின் பணியிடம் மற்றும் பணி நேரத்தினை கருத்தளவில் விரிவுபடுத்துதல் என்ற கோட்பாட்டையும் விளக்குக.

2. "Compulsory coverage of the establishments under the Employees' Provident Fund Act, 1952 is against the constitutional right of the Employer" - Elucidate.

   "1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சட்டத்தின் கீழ் நிறுவனங்களை கட்டாயப்படுத்தி உட்படுத்தும் செயல் முதலாளியின் அரசமைப்பு உரிமைக்கு எதிரானது" - விவரிக்க.

3. Describe in brief the object, applicability and extent of the Payment of Bonus Act, 1965.

   மீதூதியம் வழங்கல் சட்டம், 1965-ன் நோக்கம், பொருந்தும் தன்மை மற்றும் அளாவுகை பற்றி விவரிக்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the provisions of the Factories Act, 1948 relating to working hours of the workers.

   தொழிற்சாலைகள் சட்டம், 1948-ல் உள்ள தொழிலாளர்களின் பணி நேரம் குறித்த சரத்துகளை விவரி.

5. Discuss the structure of administrative machinery of the Employees' State Insurance Scheme.

பணியாளர்கள் அரசு காப்பீட்டுத் திட்டத்தின் நிருவாக அமைப்பினை விவரிக்க.

6. Explain the salient features of the Tamil Nadu Shops and Establishments Act, 1947.

1947-ம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் சிறப்பியல்புகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக:

(a) Powers of Compensation Commissioner.

இழப்பீட்டு ஆணையரின் அதிகாரங்கள்.

(b) Available and Allocable surplus.

கிடைக்கக்கூடிய மற்றும் ஒதுக்கப்படக்கூடிய உபரி.

(c) Forfeiture of Gratuity.

பணிக்கொடை பறிமுதல்.

(d) Permanent disablement.

நிரந்தர தகுதியிழப்பு.

(e) Kinds of Bonus.

மீதூதியத்தின் வகைகள்.

(f) Eligibility for Maternity Benefit.

மகப்பேறு நலன் பெறுவதற்கான தகுதி.

(g) Occupier of factory.

தொழிற்சாலையின் பொறுப்பாட்சியர்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A laundry was attached with medical college and hospital. 20 workmen employed in the laundry were engaged in washing clothes used in the hospital. Decide whether the employees employed in the laundry are covered under the ESI Act.

மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஒன்றுடன் சலவைச் சாலை இணைக்கப்பட்டிருந்தது. அதில் 20 தொழிலாளிகள் மருத்துவமனையின் துணிகளை சுத்தம் செய்து வந்தனர். இந்தச் சலவைச் சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களை, தொழிலாளர் அரசு காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் உட்படுத்துவது சரியா? என்பதை தீர்மானிக்கவும்.

9. Velu, an electrician had to go frequently in heating room and further to the cooling plant. One fine day, he went into the cooling room and suddenly fell ill. The doctor diagnosed it as partial paralysis. He filed an application for compensation. Decide.

வேலு என்ற மின் தொழிலாளி அடிக்கடி சூடான அறைக்கும், பின்னர் குளிர்சாதன இயந்திர அறைக்கும் போய்வர வேண்டியதாக இருந்தது. ஒரு நாள் குளிர்சாதன இயந்திர அறைக்கு சென்றவர் திடீரென நோயுற்றார். அவருக்கு பகுதி பக்கவாதம் ஏற்பட்டிருக்கிறது என மருத்துவர் கண்டறிந்தார். அவர் இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்தார். முடிவு செய்க.

10. In a tea estate, 50 workers are employed. Among them 40 are women workers, in that 30 are married. The women workers demanded creche facility from the management. Decide their claim and the number of visits allowed under the Maternity Benefit Act, 1961.

ஒரு தேயிலை தோட்டத்தில் மொத்தம் 50 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். அதில் 40 பேர் பெண் தொழிலாளர்கள் மேலும் 30 பேர் திருமணம் ஆனவர்கள். அங்கு பணிபுரியும் பெண் தொழிலாளர்கள் குழந்தைகள் காப்பகம் வேண்டி நிர்வாகத்திடம் கோருகிறார்கள். மகப்பேறு நலச் சட்டம், 1961-ன் படி, தொழிலாளர்களின் கோரிக்கை மற்றும் எத்தனை முறை அங்கு சென்று வரலாம் என்பது குறித்து தீர்மானிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

**TA5E**

**6876–25**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF TAXATION

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the procedure involved in demands and recovery under the central Goods and Services Tax Act, 2017.

   2017-ம் ஆண்டு மத்திய சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தின் கீழ் கோரிக்கைகள் மற்றும் மீட்டெடுப்பு தொடர்பான நடைமுறை பற்றி விவாதிக்கவும்.

2. Explain the importance of Organization for Economic Co-operation and Development guidelines in international taxation.

   சர்வதேச வரி விதிப்பில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் வழிகாட்டுதல்களுக்கான முக்கியத்துவத்தை விளக்கவும்.

3. "An individual's residential status is important as it determines the taxability of his or her income in India" - Analyse the statement with suitable provisions of law.

   "ஒரு தனிநபரின் குடியிருப்பு நிலை முக்கியமானது, ஏனெனில் அது இந்தியாவில் அவரது வருமானத்தின் வரி விதிப்புத் தன்மையை தீர்மானிக்கிறது". பொருத்தமான சட்ட விதிகளுடன் அறிக்கையை பகுப்பாய்வு செய்யவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the provisions pertaining to the prohibition of export and import of goods under the Customs Act, 1962.

   சுங்க வரிச் சட்டம் 1962ன் கீழ் சரக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தடை தொடர்பான சட்டப் பிரிவுகளை விளக்கவும்.

5. Enumerate the constitutional provisions relating to Law of Taxation.
வரிச்சட்டம் குறித்த அரசமைப்பு ஷரத்துகளை தொகுக்கவும்.

6. Enumerate any ten incomes which do not form part of total income.
மொத்த வருமானத்தில் சேராத ஏதேனும் பத்து வருமானங்களை பட்டியலிடுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Tax rebate
வரி தள்ளுபடி

(b) Net taxable income
வரிவிதிப்பிற்குரிய நிகர வருமானம்

(c) Income from other sources
மற்ற மூலங்களிலிருந்து பெறக்கூடிய வருமானம்

(d) Ad valorem tax
அட்வலோரம் வரி

(e) Professional Tax
தொழில் வரி

(f) Double taxation
இரட்டை வரிவிதிப்பு

(g) Art. 243H of the Constitution of India
இந்திய அரசமைப்புச் சட்ட உறுப்பு 243H

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்களைக் கூறி விடையளிக்கவும்.

8. Mr. Kabilan is a Government Employee. His annual income for the previous year 2024-2025 is Rs. 18,85,000/-. Find out the tax liability of himself for the assessment year 2025-2026 as per new tax regime under the Finance Act, 2024.

திரு. கபிலன் என்பவர் அரசு ஊழியர், முந்தைய ஆண்டு 2024-2025ல் அவரின் ஆண்டு வருமானம் ரூ. 18,85,000/-, மதிப்பீட்டு ஆண்டு 2025-2026-ல் அவரின் வரித் தொகையை நிதிச் சட்டம் 2024-ன் புதிய வரிவிதிப்பு முறையின் கீழ் கணக்கிடுக.

9. Mrs. A sold goods to Mrs. B worth Rs. 1,00,000/-. The invoice was issued on 15th January 2020, the payment was received on 31st January 2020. The goods were supplied on 30th January 2020. Determine the time of supply of goods.

திருமதி A, திருமதி B-க்கு ரூபாய் 1,00,000 மதிப்புள்ள பொருட்களை விற்றார். விலைப் பட்டியல் ஜனவரி 15, 2020 அன்று வழங்கப்பட்டது. பணம், 31 ஜனவரி 2020 அன்று பெறப்பட்டது. சரக்குகள் ஜனவரி 30, 2020 அன்று வழங்கப்பட்டன. பொருட்களின் விநியோக நேரத்தை தீர்மானிக்கவும்.

10. Mr. A is travelling from Mumbai to Delhi by Air. He purchases coffee and snacks while on the plane. The airline is registered both in Mumbai and Delhi. What is the place of supply?

Mr. A என்பவர் மும்பையிலிருந்து வான் வழியாக டெல்லிக்கு பயணம் செய்கிறார். வானூர்தியில் அவர் காபி மற்றும் திண்பண்டங்களை வாங்குகிறார். அவர் பயணிக்கும் விமான நிறுவனம் மும்பை மற்றும் டெல்லியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் காபி மற்றும் திண்பண்டங்கள் விற்பனை செய்யப்பட்ட இடம் எது?

---

Register No. | | | | | | | | |

**TA5G**

**6931–25**

(For the candidates admitted from 2022-2023 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

BHARATIYA NAGARIK SURAKSHA SANHITA, 2023.

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain in detail the various functionaries who exercise powers and discharge duties under the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023.

   பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் 2023ன் கீழ் தங்களது கடமைகளையும் அதிகாரங்களையும் செயல்படுத்தும் செயலாக்குநர்களைப் பற்றி விரிவாக விளக்குக.

2. Explain in detail the various provisions relating to medical examination provided under the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023.

   பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023ன் கீழ் மருத்துவ பரிசோதனை தொடர்பாக கூறப்பட்டுள்ள பல்வேறு வகையங்களைப் பற்றி விரிவாக விளக்கவும்.

3. What is investigation? What are the procedures which have been made under the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 regarding investigation?

   புலன் விசாரணை என்றால் என்ன? புலன் விசாரணை தொடர்பாக பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள நடைமுறைகள் யாவை?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the procedure to be observed in the trial of Summons case.

   ஒரு அழைப்பாணை வழக்கில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை விவாதிக்கவும்.

5. Explain the provisions of appeal under the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023.

பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023ன் கீழ் வழங்கப்பட்டுள்ள மேல் முறையீடு குறித்த வகையங்கள் பற்றி விளக்குக.

6. Explain the provisions relating to bail and bonds in Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023.

பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் 2023ல் பிணை மற்றும் உறுதிமுறி குறித்து கூறப்பட்டுள்ள வகையங்களை விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Appointment of Judges.

நீதிபதிகளின் பணி நியமனம்.

(b) Handcuffing.

கைவிலங்கு இடுதல்.

(c) Requirement for a valid charge.

ஒரு செல்லுபடியாகும் குற்ற வனைதலின் தேவைகள்.

(d) Witness Protection Scheme.

சாட்சி பாதுகாப்புத் திட்டம்.

(e) Plea of guilty.

குற்ற ஏற்புரை.

(f) Suspension of Sentence.

தண்டனை நிறுத்தி வைப்பு.

(g) Lalita Kumari v. Government of Uttar Pradesh. (2014) 2 SCC 1.

லலிதா குமாரி எதிர் உத்திர பிரதேச அரசு. (2014) 2 SCC 1.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' committed theft in a running train between Madurai and Coimbatore and sold the stolen property at Chennai and he was arrested by the Goa police at Goa. Where can 'A' be tried?

'A' என்பவர் மதுரைக்கும் கோயம்புத்தூருக்கும் இடையில் ஓடும் இரயிலில் திருட்டுக் குற்றத்தினைச் செய்து திருட்டுச் சொத்தினை சென்னையில் விற்றார். அவர் கோவா காவல் அதிகாரியால் கோவாவில் கைது செய்யப்பட்டார். 'A' என்பவரை எவ்விடத்தில் விசாரணை செய்யலாம்?

9. 'A' is accused of the murder of 'B' at a given time and place. The manner in which 'A' murdered 'B' was not stated in the charge. Decide.

'ஆ' என்பவரை 'அ' என்பவர் ஒரு குறிப்பிட்ட நேரம் மற்றும் இடத்தில் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்படுகிறார். ஆனால் குற்றச்சாட்டில் 'ஆ'-வை 'அ' எவ்வாறு கொலை செய்தார் என்பது கூறப்படவில்லை. தீர்மானிக்கவும்.

10. 'A' commits robbery on 'B' and in doing so voluntarily causes hurt to him. Whether 'A' may be charged jointly or separately. Decide.

'அ' என்பவர் 'ஆ' என்பவர் மீது ஒரு கொள்ளைக்குற்றத்தினைச் செய்யும் போது தன்னிச்சையாக காயமிளைக்கும் குற்றத்தினையும் புரிந்தார். அவர் மீது இரு குற்றங்களையும் சேர்த்து அல்லது தனித்தனியாக குற்றச்சாட்டு வனைய முடியுமா? என்பதனை தீர்மானிக்கவும்.

---